மருத்துவ

சித்தமருத்துவ ஆராய்ச்சி

தொகு

வைத்திய போதிரு

இலங்கா சித்த

Lanka Siddha

மருத்துவ மலர்

மலர் — 1 இதழ் — 2

சித்த மருத்துவ ஆராய்ச்சி இதழ்

சித்திரை, வைகாசி, ஆனி

கௌரவ ஆசிரியர்

வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்

MARUTHUVA MALAR

Siddha Medical Research Journal
Quarterly

Honorary Editor : Vaidya Peraringnar Dr. K. Balasubramaniam

Managing Editor : Vaidyachariny Dr. P. Rathadevy

Sub Editor : Vaidyakalanithy Dr. N. Krishnarajah

Published by : Lanka Siddha Medical Research Organisation

Address : Siddhaa Medical Research Centre,
870, K. K. S. Road, Jaffna, Sri Lanka.

விலை ரூபா 10/-

மலரின் மணம்

பேரன்புமிக்க வாசகர்களுக்கு,

தமிழர் மருத்துவத்தின் சிறப்புக்களை எடுத்துக்கூறும் தனித்துவமான ஆராய்ச்சி இதழாக மருத்துவ மலரின் இரண்டாவது இதழ் வெளிவருகிறது. தமிழர் பண்பாடு, கலாச்சாரம், மருத்துவம் இவை ஒன்றாகப் பின்னிப் பிணைந்தவை. இவற்றைப் பின்பற்றுவோர்களுக்கு இவ்விதழ் ஒரு வழிகாட்டியாக அமையும். எமது நாட்டு மக்கள் சுகமாக மகிழ்ச்சியாக வாழ இவ்விதழ் உதவும். எமது உணவு முறை பழக்க வழக்கங்கள் எல்லாம் சித்த மருத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதை எல்லோரும் அறிவர். தமிழரின் பாரம்பரிய சித்த வைத்திய முறையை வளர்ப்பதற்காகவும் அதனை உலகெங்கும் பரப்புவதற்காகவும் ஆராய்ச்சி மன்றம் சேவையாற்றுகிறது. வாசகர்களின் ஒத்துழைப்பினாலும், உதவியினாலும் இவ்விதழ் வெளிவருகிறது, அதற்காக அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மருத்துவ மலர் சிறப்பாக மலருவதற்கு உதவி புரிந்த எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். மன்றத்தின் ஆராய்ச்சிகளை இதழ் தாங்கி வெளிவருகிறது. வெளிவரும் விடயங்களுக்கு வழங்கியவர்களே பொறுப்பாகும். சித்த மருத்துவத்தை காப்பாற்றுவதற்கு நாம் அனைவரும் உழைப்போமாக. இந்த மண்ணில் வாழ்ந்த சித்தர்களுக்கும் மருத்துவ ஞானிகளுக்கும் மருத்துவ மேதைகளுக்கும் எமது வணக்கம்.

கௌரவ ஆசிரியர்

மகரந்தம்

மலரின் மணம்

மகரந்தம்

பரராசசேகரம் வழிநூலா ?

வைத்திய கலாநிதி ந. கிருஷ்ணராசா

சித்த மருத்துவமே தமிழரின் பாரம்பரியம்

வைத்திய கலாநிதி வ. பாலகிருஷ்ணன்

உடன் காய மருந்து பற்றிய ஆய்வு

வைத்திய கலாநிதி து. சண்முகராசா

Research on Coronary Artery Disease

by Vaidya Peraringnar Dr. K. Balasubramaniam

மருத்துவ செய்திகள்

வைத்திய கலாமணி (செல்வி) அ. தாட்சாயினி

மூலிகை — மாதுளை

செல்வி ஆ. சந்திரவதனி

ஈழத்து மருத்துவர் வரலாறு

செல்வி சி. சிவகவிதா

ஆராய்ச்சிப் பகுதி

பரராசசேகரம் 12000 வழி நூலா?

தமிழர் ஆட்சி அமைப்பிலே ஒருவர் அரசராக வருவதற்கு கற்க வேண்டிய கலைகளுள்ளே சித்த மருத்துவமும் ஒன்றாகும். நாட்டின் உயிர் நாடியே குடிமக்களில் தான் தங்கியுள்ளது. மக்களின் உயிர் உடல் பாதுகாப்பு சித்த மருத்துவ முறையிலேதான் அன்று அமைந்திருந்தது. யாழ்ப்பாண ராச்சிய தமிழ் மன்னர்கள் ஆரியம் வென்று ஆரியச் சக்கரவர்த்திகள் என்று புகழ்பெற்ற பட்டப் பெயர் பெற்றவர்கள். யாழ்ப்பாண அரசவையிலே தோன்றிய மாபெரும் இலக்கியம் பரராசசேகரம் 12000 நூலாகும். சித்த மருத்துவ வளர்ச்சியில் பரராசசேகரன் கொண்டிருந்த அக்கறையின் வெளிப்பாடே இந்நூலாகும். கி. பி. 12ம் நூற்றாண்டளவில் ஆரியம் தமிழ் நாட்டில் ஊடுருவத் தொடங்கியது. யாழ்ப்பாணத்திலும் அதன் தாக்கம் கி. பி. 14ம் நூற்றாண்டளவில் ஏற்பட்டது. சித்த மருத்துவத்தின் அரிய களஞ்சியம் இந்த நூல், தமிழர் மருத்துவம் சித்தர் கோட்பாடுகளுக்கு அமைவாக பரராசசேகரன் பணிப்பிற் கிணங்க புலவர்களாலும், கவிகளாலும் பாடப் பெற்றதாக அறியக் கிடக்கின்றது. கவிகள் தம் திறமையைக் காட்டியிருக்கலாம். யாழ்ப்பாணத்தின் தனியான சித்த மருத்துவ மரபினை எடுத்துக் காட்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இதில் ஆயுர்வேதம் இணைக்கப்படவில்லை. ஆயுர்வேதம் பிறிது ஒரு மருத்துவ முறையாகும். சமஸ்கிருதம் தேவபாடை என்று கூறும் ஆரியப் பண்டிதர்கள் தமிழிலுள்ள சிறப்பான கலைகளை வட மொழியிலிருந்து வந்தது என்று கூறும் கண்மூடி வழக்கம் இடைக்காலத்தில் ஏற்பட்டது. சித்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற எவராலும் இது சித்த மருத்துவ நூல் என்பதை தெளிவாக கூறமுடியும். ஆயுர்வேதம் கற்றவர்கள் பரராசசேகரம் ஒரு ஆயுர்வேத நூல் அல்ல என்பதைத் தீர்மானிக்க முடியும். இரண்டு துறை அறிவும் இன்றி மொழியறிவுள்ளவர்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது, பொருளடக்கமும், முன்னுரையும் நூலாக அமைய இல்லை. சிலர் கூறுவது போல சித்த மருத்துவம் எப்படியும் அமையலாம் என்று இல்லை. இப்படித்தான் அமைய வேண்டும் என்று தமிழ்ச் சித்தர்கள் இற்றைக்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் அறுதியிட்டு கூறியுள்ளார்கள். ஆரியதாசர்களால் எழுதப்பட்ட முன்னுரைகளும் இவ்வாறு அமைந்

ததில் வியப்பில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் ஆரியமாயை தீ பரவட்டும் என்ற நூல்களில் இவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளார். பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்களுக்கு இந்நூல் பற்றிய ஐயம் தோன்றியதனாலே இவை பற்றிய ஓர் ஒப்பியல் ஆய்வு அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூல் தன்வந்திரி வடமொழியிலே இயற்றிய ஆயுர்வேத நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும் என்பது பொருத்தமற்றது. வடமொழியில் தன்வந்திரி இயற்றிய ஆயுர்வேதம் என்று ஒரு நூல் இல்லை. ஆனால் தமிழில் தன்வந்திரி என்று ஒரு சித்தர் இருந்திருக்கிறார். சித்த மருத்துவத்தில் நூல்கள் இயற்றியுள்ளார். வடமொழியில் தன்வந்திரி என்று ஆயுர்வேத முனிவர் இருந்துள்ளார். அவரும் தமிழ் அகத்திய சித்தரிடம் சித்த வைத்தியம் கற்றிருக்கிறார். பரராசசேகரத்தில் கூறப்பட்ட சித்த மருத்துவ முறைகள் வடமொழியில் தன்வந்திரியின் எந்த ஆயுர்வேத நூல்களிலும் இல்லை என்பது தெளிவாகும். மூலநூல்களில் இல்லாத விடயங்கள் மொழிபெயர்ப்பில் இடம் பெறுமா? இது என்ன கம்பராமாயணமா? அவ்வாறு அமைவதற்கு? தனித்தமிழின் காலம்போய் இரகுவம்சம் முதலிய வடமொழி நூல்கள் நல்லூரில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட காலத்தில் எழுந்த நூல் பரராசசேகரம் என்பது கவனித்தற்பாலது. தமிழராகிய வடமொழி ஆரியக் கவிகளினால் தான் இம் மொழி பெயர்ப்பு நூல்கள் தோன்றின. பரராசசேகரம் தழுவலாகவோ அல்லது வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்பாக முதனூலாகவோ அமையவில்லை என்பது பழம் பெரும் சித்த மருத்துவர்களின் முடிபாகும். யாழ்ப்பாணத்திலே பரம்பரை பரம்பரையாக சித்த மருத்துவம் செய்துவரும் பண்டிதர்கள் பரராசசேகரம் ஒரு சித்த மருத்துவ நூல் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். இதற்கு முன்னர் தமிழ்ப் பண்டிதர்கள் (மருத்துவர்கள்) தான் மருத்துவ நூல்களை இயற்றி வந்துள்ளனர். ஒரு தமிழ் நூலை ஆராய்வதற்கு ஆழ்ந்த தமிழ் புலமை அவசியமானது. ஏடுகளை வாசிப்பதற்கும், விளங்கிக்கொள்வதற்கும் தமிழ் எழுத்தறிவும், மொழியறிவும் மருத்துவத்தில் முதிர்ச்சியும் இன்றியமையாதது. மேலும் ஐ. பொன்னையா தம்மை ஆயுர்வேத வைத்தியர் என்று குறிப்பிட்டது போல ஏடுகளைச் செப்பனிடும் போது முன்னுரையில் ஆயுள்வேதம் என்பதையும் சேர்ந்திருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடமுண்டு. ஐ. பொன்னையா பாரம்பரிய சித்த மருத்துவர். பெரிய பரிகாரியார் பிரபு ஆறுமுகம் இறந்த பின்னர் ஆயுர்வேதம் என்ற சொல் யாழ்ப்பாணத்திலே நாயன்மார்கட்டு வெற்றிவேலு பண்டிதராலும் 1925ல் டாக்டர் பஸ்தியாம்பிள்ளையினாலும் ஆரம்பத்தில் பிரயோகத்திற்கு வந்துள்ளதை அவதா

சித்த மருத்துவமே தமிழரின்

பாரம்பரியம்

தமிழருடைய பாரம்பரிய மருத்துவ முறை சித்த மருத்துவமாகும். விஞ்ஞான உலகிலே மெஞ்ஞானம் கலந்த மருத்துவம் தனிச் சிறப்பு வாய்ந்தது. பொதுவாக மருத்துவக் கலையென்றே அழைத்தார்கள். ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானால் மருத்துவ முறை உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மருத்துவம் தான் உலகிலே முதன் முதல் நடைபெற்றது. பதிணெண் சித்தர்களினால் வளர்த்து உலகின் பல நாடுகளிலும் அறிமுகம் செய்யப்பட்டதனால் சித்த மருத்துவம் என்ற பெயர் ஏற்பட்டது. மேல்நாட்டு விஞ்ஞானிகள் பலர் இம் மருத்துவ மூலிகைச் சரக்குகளை ஆராய்ந்து நவீன முறைப்படி மருந்துகள் தயாரித்து நவீன மருந்துகளாக அழகான வடிவங்களில் விற்பனைக்கு வருகின்றது. சித்த மருந்துகளையும் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரித்து அழகாகவும், கவர்ச்சியானதும் ஆன வடிவங்களில் விற்பனைக்கு விடவேண்டும். தமிழ் மருந்துவகைகளினால் நோய் குணமாக அவகாசம் எடுத்தாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தீய விளைவுகள் ஏற்படமாட்டாது. ஒரு மனிதன்

(பரராசசேகரம் தொடர்ச்சி)

னிக்க முடிகிறது. சித்த மருத்துவத்தின் சிறப்புக்களை வடமொழிக்கும் ஆயுர்வேதத்திற்கும் இணைப்பதற்காக அவையடக்கம் தவறுதலாக அல்ல மிகவும் கச்சிதமாக செய்யப்பட்டுள்ளது போல கருத வேண்டியுள்ளது.

பரராசசேகரம் தனித் தமிழ் சித்த மருத்துவ நூல் என்பதற்கு அதில் அடங்கியுள்ள அகத்தியரின் சித்த மருத்துவ முறைகளும் சித்த மருந்துகளும் சான்று பகருகின்றன.

வைத்திய கலாநிதி ந. கிருஷ்ணராசா

சுன்னாகம்

நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டுமானால் சைவ உணவு வகைகளும், சித்த மருந்துகளும் சிறந்த பலனைத் கொடுக்கும். உயிர்ச் சத்துக்கள், இலை, காய், கனி என்பவற்றில் நிறைய உண்டு, சித்த மருந்துகளில் இவை நிறையச் சேருகின்றன. சேருகின்ற படியால் தேகாரோக்கியத்திற்கு மிகவும் நல்ல பலனைக் கொடுக்கின்றது. பண்டைய காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் நோய்களை 4448 என்று வகுத்திருக்கிறார்கள். இவற்றிற்கு சிகிச்சை முறை மருந்து வகைகள் என்பனவற்றைப் பாடல்களின் வாயிலாக விளக்கியிருக்கின்றார்கள். தமிழ் வைத்தியத்தில் நிதானம் என்று ஒரு பாடநெறி உண்டு. நோயை என்னவென்று வாத பித்த கபம் என்ற தாதுக்களின் நிதானத்தினால் நோயைக் கண்டறிந்து தீர்மானித்தார்கள்.

சித்த மருத்துவம் இன்று பல்கலைக் கழக மட்டத்தில் போதிக்கப்படுவது தமிழர்களின் பண்பாட்டையும் தமிழ் மருத்துவத்திற்குப் புத்துணர்வையும் கொடுத்திருக்கிறது. திருவள்ளுவர் திருக்குறளின் மருந்து அதிகாரத்திலே எங்களுடைய தமிழ் மருத்துவ முறையையே குறிப்பிட்டிருக்கிறார். ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்ற முதுமொழிக் கிணங்க நோய் வருமுன் பாதுகாப்பு தேடுவது மருத்துவர்களின் கடமையாகும். நோய் வந்தவுடன் தகுந்த சிகிச்சை எடுப்பதனால் இலகுவாக நீக்க முடியும். நோயை முற்ற விட்டு பரிகாரம் தேடுவது சிறந்ததல்ல, இந்த வகையில் இன்று தமிழ் ஈழத்திலே ஒரே ஒரு அமைப்பாகிய சித்தா மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சித்த சுகாதார சேவை நடைபெறுவதற்கும் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும் பனை தென்னை வள கூட்டுறவு அமைப்புக்கள் சித்த மருத்துவ சேவை செய்வதற்கும் பாராட்டத் தக்க வகையில் அரும் பணியாற்றி வருவது தமிழ் உலகம் அறிந்ததே.

வைத்திய கலாநிதி வ. பாலகிருஷ்ணன்
வைத்திய அதிகாரி,
வடமராட்சி ப. தெ. வ. அ. கூ. ச. கொந்தணி
கரவெட்டி.

உடன் காய மருந்து பற்றிய ஆய்வு

ஒதியம்பட்டை. தாவர வியற் பெயர்—Ordina Wodier

சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்திலே உடன் காயங்களை ஆற்றுவதற்கும் அவற்றில் இரத்தப் பெருக்கினைக் கட்டுப்படுத்தவும் நடைபெற்ற ஆராய்ச்சிகளில் ஒதியம் பட்டையிலிருந்து புதிய மருந்தொன்றினை வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் கண்டு பிடித்துள்ளார். ஒதியம் பட்டையை மூலப் பொருளாகக் கொண்டு வேறு சில மூலிகைகளும் சேர்த்து இம் மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்களில் இவவசமாக பரீட்சிக்கப்பட்டு வெற்றியளித்துள்ளது. உடன் காயங்களை ஆற்றுவதிலும், உதிரப் பெருக்கை நிறுத்துவதிலும் சிறப்பாக பயன் படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சித்த மருத்துவக் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு 55 ml. போத்தல்களில் மிகக் குறைந்த விலையில் பாவனைக்கு வருகிறது. பஞ்சில் நனைத்து காயத்தின் மேல் ஒட்டினால் இறுகிப் பற்றிக் கொள்ளும். காயம் ஆறிய பின்னரே கழரும். நீர் படக் கூடாது. நீர் பட்டதால் சீழ் பிடித்துக் காணப்பட்டது மூன்று நோயாளிகளில் அவதானிக்கப்பட்டது. சித்த மருத்துவ வரலாற்றில் இம் மருந்து கண்டு பிடிக்கப்பட்டது தமிழர்களுக்கும் சித்த மருத்துவர்களுக்கும் கிடைத்த பெரு வெற்றியாகும், இம் மருந்துகளை காலப் போக்கில் மேல்நாட்டு வைத்தியர்களும் பாவிக்கும் நிலை வரலாம்.

வைத்திய கலாநிதி து. சண்முகராசா
கௌரவ செயலாளர்

இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

1. தோல் வியாதிகளுக்கு—கருமேகம் போன்ற சகல வியாதிகளுக்கும் தினமும் வில்வ இலையை ஒரு பிடி அளவு ஒரு மண்டலம் சாப்பிட்டு வர குணமாகும்.
2. ஒற்றைத் தலைவலிக்கு — குப்பைமேனியின் இலைச் சாறில் வேர்க்கொம்பினை இழைத்துப் பற்றுப் போடவேண்டும்.
3. மாலைக்கண் நோய்க்கு — தினசரி முருங்கைக் கீரையை தொடர்ந்து சில நாட்கள் சாப்பிட இந் நோய் குணமாகும்.
4. வல்லாரை இலையை தினமும் காலையில் ஒரு பிடி சாப்பிட்டு வர நினைவாற்றல் உண்டாகும்.

"அற்றால் அளவறிந்து உண்க, அஃது உடம்பு பெற்றால் நெடிது உய்க்கும் ஆறு"

தொகுப்பு :- சஞ்சீவி க. கனகராசா.

RESEARCH ON CORONARY ARTERY DISEASE

By

Vaidya Peraringnar Dr. K. Balasubramaniam

Chief Medical Research Scholar.

conducted at Siddhaa Medical Research Centre,

Jaffna, Sri Lanka.

Heart diseases are common in our country and it is a main cause of early death among the people. The modern science is far advanced and they have latest methods in the treatment of Heart diseases. In most patients if once they had heart attack it is very difficult to return to normal life and they have to continue with many drugs to prevent further attacks. It was due to the coronary insufficiency and they were not recovered completely from myocardial infarction. By pass surgery treatment has successfully done now. Arteriosclerotic heart diseases of the corona.y arteries is the commonest underlying cause of cardio vascular disability and death Smooth muscle cell proliferation combined with a disorder of lipid metabolism is thought to be responsible for the localized subintimal accumilations of fatty and fibrous tissue that progressively obstruct the epicardial portions of the coronary arteries and their main branches. A deficiency or imbalance in certain tissue enzymes such as prostaglandins has been proposed as the mechnism that allows adherence of platelets and accelerates the atherosclerotic process. This subject is under intensive investigation.

Although it has been considered for years that the low density lipoproteins are the most important components of lipids with respect to atherosclerosis, some recent data suggest that high density lipoproteins may be more important. There is an inverse relationship between the concentration of high-density lipoproteins and the incidence of clinical coronary events, so a high concentration is protective.

Risk factors established by prospective studies that predispose to the development of Ishaemic Heart Disease include age, genetic predispositions, arterial hypertension, diabetes mellitus, hypercholesterolemia and hypertriglyceridemia and cigarette smoking. Other factors of less importance include obesity.

PREVENTION OF ISCHEMIC HEART DISEASE

Although it has been shown that individuals who have the risk factors listed above - especially if they are present in combination and if the patient is under age 50 - have a risk of developing clinical disease. Emphasis should therefore be given to prevention. Hypertension and diabetes should be adequately treated, cigarette smoking should be discouraged, and optimal weight and physical fitness should be encouraged.

PATHOPHYSIOLOGY

Men are more often affected than women by an overal ratio of 4 : I. In men the peak incidence of clinical manifestations is at age 50 - 60, in women at age 60 - 70. Myocardial ischemia can be induced by exercise, by cold or by atrial pacing to increase the heart rate. The pathophysislogy of arteriosclerotic heart disease listed as Angina Pectoris, Acute myocardial infarction, Intermediate coronary syndrome, Heart failure, acute and chronic arrhythmias.

I *Angina Pectoris*

Pressure like pain, appears quickly during exertion may radiate and subsides with rest. Angina Pectoris is usually due to arteriosclerotic heart disease but in rare instances it may occur as a result of coronary spasm, severe aortic stenosis or insufficiency, syphilitic aortitis, increased metobolic demands as in hyper thyroidism or after thyroid therapy, marked anaemia or paroxymal tachycardias with rapid ventricular rates. Spasm may occur both in normal and in stenosed coronary arteries. Angina Pectoris and even myocardial infarction may occur as a result of spasm in the absence of visible abstructive coronary heart disease.

2. *Unstable Angina*

This syndrome called by some preinfarction angina, intermediate coronary syndrome, premature or impending myocardial infarction or coronary insuffiency refers to a syndrome intermediate between the angina pectoris of effort and acute myocardial infarction in the spectrum of clinical events that occur in coronary heart disease. The syndrome is recognised by the appearance of pain, duration, radiation and severity or occurs at rest or during the night.

3. *Acute Myocardial Infarction*

Sudden development of prolonged constricting anterier chest pain that may produce arrhythmias, hypotension, shock or cardiac failure, fever, leukocytosis, rising sedimentation rate, elevated serum enzymes such as myocardial band isoenzymes of CPK SGOT or LDH within 24 - 48 hours. CPK - MB is the most specific and appears earlist in the serum.

Electrocadiagraphy :

Abnormal Q waves, elevated S T, later symmetric inversion of T waves. Myocardial infarction is ischemic necrosis due to occlusion of a coronary artery by thrombus or subintimal haemorrage at the site atheromatous narrowing. Infarction may occur in the absence of complete occlusion if coronary blood flow is temporarily reduced, as in post operative or traumatic shock, gastro intestimal bleeding or hypotension due to any cause, or dehydration. The location and the extent of infarction depend upon the site of current and previous occlusions and the adequacy of collatoral circulation. Thrombosis occurs most commonly in the anterior descending branch of the left coronary artery Pain, infarction. shock, heart sounds are faint or diminished, fever, Leukocytosis 10 - 20, thousand cells, sedimentation rised, elevation of S T segment and T waves and abnormal Q waves. An E. C. G. taken early in an attack often shows S T. segment displacement.

RESEARCH

Mostly chronic patients were taken into study at Research centre. They were diagnosed and treated by Professors or by

Heart Specialists. For the diagnosis of a heart patient we are applying the Siddha Clinical Medicine and in addition to that we are taking lab tests and E. C. G. for the confirmation of disease The coronary thrombosis is mentioned in Siddha Pathology as Rudra Roga. The term commonly used as Nenjadai Vayu is coronary spasm. There are so many types of heart diseases were mentioned by Siddhas found in Siddha pathology. After the diagnosis was made according to Siddha Pathology. We are deciding the treatment for the stage of the disease at the time of arrival of the patient.

Treatment of Angina Pectoris

Two Garlic Pills were used with the juices of ginger, garlic and honey 3 times a day. The pain subsides within an hour in most cases who have angina due to spasm But in most cases we found that the severity of pain was reduced but not campletely free. They were treated with Sanchivy 2 pills with the same accompanients shown free from symptoms. To prevent relaps we gave a course of treatment with Agathiyar Gorochanai Pills and Sanchivi Sivappu for 40 days shown better results.

Treatment of Unstable Angina or Coronary Insufficency

These patients were treated for angina and for infarction. For angina or chest pain we used the same drugs mentioned earlier for Angina. Poorna Chandrothaya Senduram, one grain with bee honey morning and evening for 30 - 40 days. Amirtha Sanchivi or Thanga Elathy or Peria Vettyvelautham 2 pills given with decoction and honey 2 times. The decoction Zingiber officinale, Adatoda vasica, Santalum album, punica Granatum, cuminum, caryophyllus Aromaticus, Phyllanthus Emblica, Terminalia Arjuna, Cardamum. Duration of treatment 45 days, in severe cases the treatment extended to 60 days.

Diet - Salt, pungent, sour, bitter things, meat, eggs, Potatoes, tomatoes, dry fish were avoided.

Brown rice, green gram, ash plantain, rice flour, brinjal, onion, drum sticks and leaves, white beans, Penny wort.

ginger, garlic, ‘Ponnankani keerai’ were used. Black pepper, coriander, and cumin seed were used as curry powder cow milk used without fat.

Other regimens. — Patients treated with complete rest. Oil bath or head bath avoided. Sleeping in day time, family intercourse were strictly prohibited. Mental rest is important.

OBSERVATION

Every week the symptoms and signs were reduced and health improved. On examination the patients seem that they were returning to normal. They were able to do their duties Their E. C, G. reading showed that they were recovered from coronary insufficiency.

RESULT

I have done studies nearly in 100 patients and 80% of them completely recovered. 15% patients have complications of diabetes mellitus, obese took more time for the treatment and 5% of patients have no improvements.

CONCLUSION

The results of our studies shown that gold have an important role in curing the disease of the heart and the Poorna Chandrothaya Sendura, Amirtha Sanjivi Pills, Peria Vetty Velutham pills, Thanga Elathy Pills, Garlic Pills, Sanjivi Sivappu pills proved its effectiveness in curing coronary Heart Diseases.

★

Medical Service

What higher aim the man can attain who conquest the human pain.

William Shakespeare

Science

Science and art belong to the whole world and the barriers of nationality vanish before them.

Goethe

சிறுநீரக அழற்சிநோய் பற்றிய ஆய்வு

இந்த நோயில் சிறுநீரகங்கள் அழற்சியடைகின்றன. தீவிர நோய் ஆகவும் அல்லது நாட்பட்ட நோயாகவும் இந் நோய் காணப் படுகின்றது. சிறுநீரக அழற்சி நோயைச் சித்தமருத்துவர்கள் மேக ரோகங்களில் ஒன்றாக கணிக்கிறார்கள் இந்த நோய் ஏற்படுப வர்களுக்கு சலாசயங்கள் பாதிப்படைவதோடு சலத்திலும் மாறு பாடுகள் காணப்படுகின்றன. மேகங்கள் தோன்றுவதற்கு வெப்பம் காரணமாயிருப்பதுபோல உடலில் மேகநோய் தோன்றுவதற்கு சூடு அதிகரிப்பதே மூலகாரணமாக அமைகின்றது. சிறுநீரகங்களைச் சில இரசாயன மருந்துகள் அழற்சி அடையச் செய்கின்றன, நச்சுச்செறிவு உள்ள உணவுகளாலும் வேறு பல காரணங்களினா லும் சிறுநீரக அழற்சி நோய் உண்டாகின்றது. சிறிய பாதிப்புடன் நோயின் கடுமை தெரியாதவாறு உண்டாகும் அழற்சி நாட்பட்ட நோயாகும். தீவிரமாக திடீர் என உண்டாகி சிறுநீரகத்தின் மயிர்த் துளைக் குழாய்களில் அழற்சியை உண்டுபண்ணி சலம் போவதைப் பெருமளவில் குறைந்து காணப்படுவது தீவிர சிறுநீரக அழற்சி நோய் ஆகும். இவற்றை ஆங்கிலத்தில் (அக்கியூற் நெப்பிறைறிரிஸ்) Acute Nephritis என்றும் (குறோனிக் நெப்பிறைறிரிஸ்) Chronic Nephritis என்றும் அழைப்பார்கள்.

தீவிரமாக தோன்றும் காய்ச்சல்களினால் இரத்தத்தில் ஏற்படும் நச்சுத்தன்மையும் இந்த நோய் உண்டாகக் காரணமாகிறது. சில விதமான நாட்பட்ட வாதநோய்களும் சிறுநீரகம் பாதிப்படைய ஏதுவாகிறது. ஈய நஞ்சுகளும் சிறுநீரகத்தைத் தாக்குகின்றன. சில வேளைகளில் கர்ப்பிணிகளிலும் சிறுநீரக அழற்சி நோய் காணப்படுகிறது.

தீவிர அழற்சியின்போது கடுமையான வேதனையுடன் கூடிய தாகவும் சிறுநீரின் அளவு மிகக்குறைந்தும் சிறுநீரில் புரதச்சத்து, வெண்சீவ அணுக்கள், வெஞ்சீவ அணுக்கள் காணப்படும். உடல் முழுவதும் வீக்கம் ஏற்படும். சிலவேளைகளில் மரணம்கூட நிகழ லாம். சிறுநீர் உப்பு வெளியேறுவதுவெகுவாகக் குறைந்துவிடும் இத னால் இரத்தத்தில் சிறுநீர் உப்பு அதிகரித்துக் காணப்படும். இந் நிலையை ஆங்கிலத்தில் (கை பிளட் யூரியா) High Blood urea என அழைப்பார்கள்.

இத்தீவிர நோய் தணிவடையலாம் அல்லது நாட்பட்ட நோயாக மாறலாம். நாட்பட்ட அழற்சியின்போது சிறுநீரகத்தின் உள்

அமைப்புகளில் வெடிப்புகள் காணப்படுகின்றன. இதனால் சிறுநீரகத்தின் அமைப்புகளில் ஒழுங்கீனங்கள் ஏற்படுகிறது. சில வேளைகளில் சிறுநீரகம் வீங்கிக் காணப்படும். நாள்பட நாள்பட சிறுநீரைப் பிரிக்கின்ற கலங்கள் சிதைவடைகின்றன. இதனால் இரத்தத்தில் இருந்து சிறுநீர் சரியான முறையில் பிரிக்கப்படாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் இரத்த அமுக்கம் அதிகரித்து தோன்றும். நாள்ச்செல்லச்செல்ல அதிகரித்த இரத்தமுக்கத்தினால் இருதயத்தில் பாதிப்புக்கள் தோன்றுகின்றன. இவ்வாறு சிறுநீரக அழற்சி நோயினால் ஏற்படும் பாதிப்புக்களினால் சிறுநீரகங்கள் சேதம் அடைந்து முடிவில் மரணத்துக்கு இட்டுச் செல்கின்றன. இந்த நோய்களை மருந்துகளின்மூலம் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலையினாலேயே மேல் நாடுகளில் பரவலாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது. இன்று நமது நாட்டிலும் சிறுநீரக அழற்சி நோயினால் பெரும்பாலானோர் அவதிப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது எல்லோராலும் முடியாத காரியம். இதற்குப் பெருந்தொகையான பணம் வேண்டும். அதற்கும் மேலாக சுகதேகி ஒருவரின் நல்ல நிலையில் உள்ள சிறுநீரகமும் தேவைப்படுகிறது. பத்திரிகைகளில் அநேகமாக மாற்று சிறுநீரகத்துக்கான விண்ணப்பங்களையும் அறுவைச் சிகிச்சைக்கான பணத்தைக் கோரும் விண்ணப்பங்களையும் காணலாம்.

சித்தமருத்துவ முறையில் சிறுநீரக அழற்சிநோயினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நோயாளர்களுக்குச் சுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நோயில் நோயாளி மிகவும் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அழற்சி அடைந்திருக்கின்ற சிறுநீரகங்களை உறுத்தக்கூடிய உணவுகளையோ, நீர்வகைகளையோ மருந்துகளையோ கண்டிப்பாக தவிர்க்கவேண்டும். குறிப்பாக முருங்கைக்காய், தக்காளிக்காய், முட்டை, உருளைக்கிழங்கு, அன்னாசிப்பழம் ஆகியவற்றை நீக்கவேண்டும். சாதாரணகாய்ச்சல் ஏற்பட்டால்கூட உயிர் கொல்லி மருந்துகளையோ அல்லது இரசாயன மருந்துகளையோ, பாவிப்பதை தவிர்க்க வேண்டும். முக்கியமாக இந்த நோய் உள்ளவர்களுக்கு வேறு வியாதிகள் ஏற்பட்டால் தாம் சிகிச்சை பெறும் வைத்தியருடைய ஆலோசனையுடனே மருந்துகளை உட்கொள்ளல்வேண்டும். தாமாக காய்ச்சல், தடிமன் வியாதிக்கு பாவிக்கப்படும் குளிகைகளைக்கூட பாவிக்கக் கூடாது. ஏனென்றால் பாதிக்கப்பட்ட சிறுநீரகம் இம்மருந்துகளினால் செயல் இழக்கும் நிலை ஏற்படலாம். இப்படியான நேரங்களில் கொத்தமல்லி, நற்சீரகம், மிளகு, சுக்கு, தூதுவளை ஆகிய

மூலிகைகளை அவித்து வடிகட்டி கற்கண்டு அல்லது தேன் கலந்து குடிப்பதனால் எந்த விதமான ஆபத்துக்களும் ஏற்படமாட்டாது என்பது அனுபவ வாயிலாக கண்டறியப்பட்டுள்ளது. உடம்பின் சூட்டைத் தணிக்கக்கூடியதும் அழற்சியை நீக்கக்கூடியதுமான மூலிகைகளின் குடிநீர் இந்நோயைத் தணிப்பதில் நன்றாக வேலை செய்கிறது. அவையாவன, சிறுநெருஞ்சி, ஆனைநெருஞ்சி, சுரை இலை, கற்றாளம் சருகு, வெள்ளரிவித்து, நன்னாரி, சீந்தில், சிற்றமட்டி ஆகும்.

இவற்றில் இருபத்தி ஐந்து கிராம் வீதம் வாங்கி 3 போத்தல் நீர் விட்டு ½ போத்தல் ஆக வற்றவைத்து ஒருவேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் 1 நாளைக்கு 3 தடவை தினமும் குடித்து வரவேண்டும். சலம் போவது குறைவாக இருந்தால் நீர்முள்ளி, தேங்காய்ப்பூக் கீரை, முல்லை போன்ற சரக்குகளையும் சேர்க்கலாம். தகுந்த வைத்திய ஆலோசனை இன்றி மருந்துகளை நோயாளர்கள் தமது அறிவுக்கு ஏற்ப பாவிப்பதால் எதிர்பார்க்கும் நன்மைகளுக்குப் பதிலாக தீமைகளே விளையலாம். இக்குடிநீருடன் சலோதாரி மணி, தேத்தாங்கொட்டைக் குளிகை, பொரிகாரக் குளிகை, ஏதாவது ஒரு மருந்தில் ஒரு நேரம் ஒரு குளிகை வீதம் குடிப்பது விரைவாக நோயை நீக்க உதவும். நோயின் நிலை முற்றிக் காணப்படுமானால் அமுதசர்க்கரை, அமுதஏலாதிச் சூரணம், சிங்கி பற்பம், வெண்கார பற்பம், பொரிகாரபற்பம் ஆகிய மருந்துகளில் ஒன்றையோ அல்லது இரண்டையோ ஒரேவேளையில் கொடுக்கலாம். பூரணச்சந்திராதி இருதயம் பாதிக்கப்பட்ட நிலையில் அதைச் சீர்செய்வதற்கு நல்ல மருந்தாகும்.

மருந்துகளைவிட இந்த நோய் குணமடைவதற்கு பத்தியம் மிக மிக அவசியமானதாகும். சிகிச்சைகள் ஒன்றரை மாதங்கள் நீடித்தாலும் பத்தியங்கள் 6 மாதங்கள் கடைப்பிடிக்கப்படவேண்டும். உப்பு சேர்க்கக்கூடாது, தவிர்கவேண்டும். ஊறுகாய், பழப்புளி, மீன், முக்கியமாக ஆகாது. ஊர் அரிசி, பாசிப்பயறு, சாம்பல் வாழைம்பிஞ்சு, முள்ளங்கி, சுரைக்காய், நீற்றுக்காய், பசுப்பால், ஈரவெங்காயம், தேங்காய் சேர்க்கலாம். புகை, மதுபானம், பகல் நித்திரை உடலுறவு ஆகாது. வென்னீரில் குளிக்கலாம். இவ்வாறு மருந்துகளையும் பத்தியங்களையும் கவனமாக கடைப்பிடித்தால் நோயாளியும் குணமடைவதுடன் மாற்று சிறுநீரக அறுவைச்சிகிச்சைக்கு அவசியமும் ஏற்படாது. சுகதேகியையும் நல்ல சிறுநீரகத்தை நீக்கி தொந்தரவு கொடுக்காமல் தவிர்க்கலாம்.

ஆராய்ச்சி நிலையத்திலிருந்து தொகுத்தவர் :

செல்வி க. பிறேமலதா
வைத்திய மாணவி 2ம் வருடம்
சித்தா வைத்திய ஆராய்ச்சி நிலையம்
யாழ்ப்பாணம்

மருத்துவ மலர் வெளியீடு

மருத்துவ மலரின் முதலாவது இதழ் வெளியீடு 22 - 2 - 95ல் வட பிராந்திய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் கூட்டுறவு அலுவலகத்தில் நடைபெற்றது. முதலாவது பிரதியை மக்கள் வங்கியின் யாழ். கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் திரு. கோபாலகிருஷ்ணன் பெற்றுக்கொண்டார். வைத்திய கலாநிதி செ. து. சண்முகராசா நூல் ஆய்வுரையை நிகழ்த்தினார். அவ் விழாவில் வைத்திய கலாநிதிகள் சித்த வைத்திய கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு அலுவலகத்தில் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (பனை அபிவிருத்தி) திரு. தி. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் 22 - 2 - 95ல் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் ஆண்டறிக்கை, கணக்குத் தொகுப்பு அறிக்கை, வரவு செலவுத் திட்டம், நிர்வாகிகள் தெரிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சித்தா சுகாதார சேவை

மாதாந்தக் கருத்தரங்கு

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரும் சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் ஆகிய திரு. தி. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் 7 - 3 - 95ல் கூட்டுறவு அலுவலகத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் இந்த சுகாதார சேவையைப் பூரணமாக நடாத்துவதற்கு தேவையான நிதி உதவியைப் பெற்றுக்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றித் தெரிவித்தார். வைத்திய ஜோதி (திருமதி) திலகவதி கோபாலரத்தினம் சமுதாய மருத்துவமாக சித்த மருத்துவம் என்னும் பொருள் பற்றி உரையாற்றினார். வைத்திய அதிகாரிகள், மகளிர் இணைப்பாளர்கள், மருந்தாளர்கள், சுகாதார சேவையாளர்கள் ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்.

பிரதேச சபை செயலாளர்கள் வைத்திய அதிகாரிகள் கலந்துரையாடல்

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பணிமனையில் வட பிராந்திய கூ. ஆ. உ. ஆணையாளரும், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு. தி. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் 29-1-95லும், 16-3-95லும் நடைபெற்றது. கோபாம் மருந்துகள் பற்றியும் அதன் விநியோகம் பற்றியும் பிரதேச சபைகளின் மருந்துத் தேவைகள் பற்றியும் கலந்துரையாடல் இடம்பெற்றது. பிரதேச சபைகளின் செயலாளர்கள், வைத்திய அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

உண்ணாட்டு மருத்துவ சுகாதார சேவை

உண்ணாட்டு மருத்துவ சுகாதார சேவைத் திட்டம் சம்பந்தமாக சுதேச வைத்தியத்துறை அமைச்சர் கௌரவ அமரசிறி தொடங்கொட அவர்களின் கருத்துக்களின்படி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் உண்ணாட்டு வைத்திய அதிகாரிகளின் அபிப்பிராயங்களுக்காக சுற்று நிருபமாக ஆயுர்வேத ஆணையாளர் திரு. என். டபிள்யு. வெரளுப்பிட்டியாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் உண்ணாட்டு வைத்தியர்களிடமும். நாட்டு மக்களிடமும் நல்ல வரவேற்பைப் பெறும் என நம்பலாம்,

பொன்மனச் செம்மல் பொன். சத்தியமூர்த்தி

1972ம் ஆண்டிலிருந்து ஒரு முன்னுதாரணமான கூட்டுறவாளனாக வாழ்ந்தவர். 23 வருடகாலம் கூட்டுறவுச் சேவையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பொது முகாமையாளராகவும் சிறந்த சேவையாற்றியவர். சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர்களில் ஒருவராக 1992ம் ஆண்டு தொடக்கம் பணியாற்றியவர். யாழ். மாவட்ட சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் கட்டைவேலி, நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் சேவையாற்றியவர் தான் சார்ந்திருந்த தாபனங்களுக்கூடாகவும், கூட்டுறவுத்துறை வாயிலாகவும், தமிழரின் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு பணியாற்றியவர். 15-3-95ல்

அகால மரணமானது எல்லோருக்கும் பேரிழப்பாகும். அன்னாருக்கு எமது ஆழமான அஞ்சலியைச் செலுத்துகிறோம். அவரின் பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பணிப்பாளர்கள்,
மாணவர்கள்,
சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம்,
யாழ்ப்பாணம்.

★

இணைப்பாளர்கள்

இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தின் இணைப்பாளர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வைத்திய கலாநிதி வ. சிவபாலன்
திருகோணமலை.

வைத்திய கலாநிதி செல்வி சி. சிவானி
ஓமந்தை.

வைத்திய கலாநிதி மு. தேவராசா
புதுக்குடியிருப்பு.

வைத்தியாச்சாரி தாமோதரம்பிள்ளை
கிளிநொச்சி.

வைத்திய கலாநிதி மகேந்திரன்
மன்னார்.

வைத்திய கலாநிதி சாம்பசண்முகநாதக் குருக்கள்
இங்கிலாந்து.

வைத்திய கலாநிதி செல்வி ஆ. மேகலா
இந்தியா.

மாதுளை Pomegranate

தாவரவியல் பெயர் Punica Granatum

இலங்கை எங்கிலும் பரவலாகப் பயிராகிறது. இதில் இனிப்பு மாதுளை, புளிப்பு மாதுளை, பூமாதுளை என மூவகையுண்டு மாதுலங்கம், மாதுளம், கழுமுன், தாடிமம், பீசபூரம் எனவும் அழைக்கப்படும். மாதுளையின் பூ, பிஞ்சு பழம், விதை, பட்டை, வேர், இலை முதலியன பயனுள்ளவையாகும். மாதுளையின் பூ, பழத்தோல், பட்டை முதலியன துவர்ப்பு சுவையுடன் கார்ப்பு வகைப் பிரிவாகவும், பழமும் விதையும், இனிப்பு சுவை தட்ப மான தன்மை, இவற்றுடன் இனிப்பு வகைப் பிரிவாகவும் இருக்கும் பொதுவாக மாதுளை உடற்கட்டுக்களையும், நரம்புகளையும் சுருக்கி சீழ், குருதி ஆகியவற்றை நிறுத்தும் துவர்ப்பியாகவும் பூவும், பழத்தோலும் துவர்ப்பி மற்றும் பசியை தூண்டுபவையாகவும் வேர் மரப்பட்டை இலை புழுக்கொல்லியாகவும் விதை, துவர்ப்பி, புழுக்கொல்லி, ஆண்மை பெருக்கி மற்றும் உடலுக்கு துவர்ப்பை தருபவையாகவும், பழம் குளிர்ச்சியைத் தருபவையாகவும் பயன் படுகின்றது.

மாதுளம் விதை:- மாதுளம் விதையினால் உடலுக்கு ஊட்டமும் ஆண்மையும் உண்டாகும். இலேகியங்களில் சேரும் இவ்விதையினால் நீர்த்துப்போன விந்து இறுகும். வெள்ளையில் காணும் நீர்க் கடுப்பு நீங்கும். இதற்கு விதையைப் பசுவின்பால் விட்டு அரைத்து அருந்த வேண்டும்.

மாதுளம் குடிநீர்:- மாதுளம் கடம்பு, புங்கு, இவற்றின் வேர் கள், சுக்கு, திற்பலி, அத்திக் கொழுந்து, கடுக்காய், தான்றிக் காய், நெல்லிவற்றல் ஆகியன சமன் கூட்டி 1500 m l நீரிவிட்டு 200 m l ஆக காய்ச்சி அருந்த சுரக் கழிச்சல் தீரும்.

மாதுளை நெய்.- மாதுளம் பூ, பிஞ்சு, வேர், பட்டை, பழத் தோல், இலை இவை வகைக்கு 40g அதிமதுரம், சீந்தில், சர்க் கரை 200 g ஆகியவற்றை இடித்து அம்மியில் வைத்து சிறிது பசுவின் பால் தெளித்து வெண்ணெய்போல் அரைக்கவும். 400g பசுவின் வெண்ணெய்யை அடுப்பிலேற்றி உருக்கி அரைத்த விழு தைக் கூட்டி நெய்யும், வண்டலும் வெவ்வேறாகப் பிரியும் சமயம்

வடித்துக் கொண்டு பெரியவர்களுக்கு ஒரு தேக்கரண்டி வீதம் வெந்நீருடன் உட்கொள்ள சீத பேதி, உஷ்ண பேதி, கிராணி நோய், வயிற்றிரைச்சல், கண்ணெரிச்சல் முதலியன நீங்கும்.

மாதுளம்பூ - மாதுளம் பூவினால் இரத்த வாந்தி இரத்தமூலம் வயிற்றுக்கடுப்பு வெப்பு முதலியன நீங்கி, உடலில் இரத்தம் பெருகி வன்மை உண்டாகும். மாதுளம் பூவின் மொட்டை உலர்த்தி பொடித்து 4 அரிசியெடை கொடுக்க இருமல் குணமடையும். பூவையும், அறுகம்புல்லையும், குடிநீரிலிட்டு உடன் சிறிது பொரித்து வெங்காரம் கூட்டி வாய் கொப்பளித்துவர தொண்டை நோய் தீரும். பூவின் சாறும், அறுகம்புல்லின் சாறும் சமன் கலந்து அருந்த மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் நிற்கும். உலர்த்தி சூரணித்தது, வேலம்பிசின் தூள், இவை வகைக்கு 5 கிராமுடன் அபின் 3 அரிசி எடை சேர்த்து வேளைக்கு 4 முதல் 6 குன்றியெடையாக கொடுத்துவர இரத்த சீதபேதி, இரத்த சிறுநீர், இரத்த மூலம் முதலியன நீங்கும். பூ மாதாளம் குடிநீர் இட்டு குடிக்க இருதய பெலவீனம் நீங்கும்.

மாதுளம் பிஞ்சு :- மாதுளம் பிஞ்சினால் கழிச்சல் வகைகள் குணமாகும். மாதுளம் பிஞ்சு, கோரைக் கிழங்கு, அதிவிடயம் விளாங்காய்கபர் சுக்கு வகைக்கு 10 கிராம்வீதம் 1500 m l நீர் விட்டு 200 m l ஆக வற்ற வைத்து குடிக்க, கழிச்சல் சுரம் நிற்கும். புளிப்பு சுவையுடைய மாதுளம் பிஞ்சு, ஏலக்காய், கசகசா, குங்கிலியம், இவற்றை பொடி செய்து காலை, மாலை 2 gr வீதம் அருந்திவர நீடித்த கழிச்சல் சீதபேதி குணமாகும். மாதுளம் பிஞ்சின் மேல் தோலை உலர்த்தி இடித்து சுரணித்து ஒரு நேரம் 20—30 gr வீதம் தயிரில் கொடுக்க சீதபேதி நிற்கும் பிஞ்சுக்காயை அரைத்து எலுமிச்சங்காய் அளவு எடுத்து தயிருடன் குடிக்கலாம். மாதுளம் பிஞ்சு கீழ்க்காய் நெல்லி, சீரகம், கொத்தமல்லி, கருந்துளசிச் சாற்றில் அரைத்து தினம் இருவேளை கழற்சிக்காய் அளவு சாப்பிடுவதாலும் மாதுளம் பிஞ்சை குடிநீர் இட்டு குடிப்பதாலும் கழிச்சல் சீதபேதி வாந்தி முதலியன நீங்கும்.

மாதுளம் பழம் ;- இனிப்பு சுவைமிக்க மாதுளம் பழத்தை உண்பதனால் ஆண்மை வலுக்கும். முப்பிணி, வாந்தி, தாகம், கருப்பை நோய்கள், விக்கல், வாய் யூற்றல், மந்தம், உடல் வெப்பு, நெஞ்செரிவு, காதடைப்பு, மயக்கம் முதலியன நீங்கும். உடம்பு குளிரும். முத்தி வெடித்த மாதுளம் முத்துக்களை துணியில் இட்டு பிழிந்து சாறு எடுத்து கற்கண்டு சேர்த்து பாகு காய்ச்சி அருந்தி வர வெப்பு தேக எரிவு தாகம் நீங்கி குளிர்ச்சி

உண்டாகும். புளிப்பு மாதுளம் பழச் சாற்றில் கற்கண்டுத் தூளை வெள்ளைத் துணியினால் முடிந்து ஊறவைத்து கண்களில் பிழிய கண்குத்தல், வீக்கம், சூடு, தீரும். மாதுளம்பழத் தோலினை குடிநீர் இட்டு வாய் கொப்பளிக்க வாய்ப்புண் ஆறும். மாதுளம் பழத் தோலின் தூள் சீமைச் சுண்ணாம்பு கலந்து பல் துலக்கி வர பல்வலி நீங்கும். பழத் தோலுடன் இலவங்கப்பட்டை, கராம்பு சிறிதளவு சேர்த்து குடிநீர் இட்டு கொடுக்க சீதபேதி நிற்கும். மாதுளம் பழக் கோதுடன் மங்குஸ்தான் கோதும் சேர்த்து இதற்கு குடிநீர் இட்டுகுடிக்கலாம். மாதுளம் பழச் சாற்றுடன் தேன் கலந்து குடிக்க இருதயச் சோர்வு குறையும்.

மாதுளம் வேர்ப் பட்டை :- மாதுளம் வேரினால் கழிச்சலும் வாந்தியும் நிற்கும். மாதுளம் வேர்ப்பட்டை சிறிதளவு கராம்பு, தண்ணீர் சேர்த்து $\frac{1}{3}$ காய்ச்சி கொடுக்க குடல்புழு விழும். ஒரு நாளைக்கு 5, 6 தடவை இக்குடிநீரை கொடுத்து பின்னர் பேதி மருந்து கொடுக்க வேண்டும். பெண்களின் பெரும்பாட்டு நோய்க்கு மாதுளம் வேர்ப் பட்டைக் குடிநீருடன் சிறிதளவு தேன் கலந்து கொடுக்க குணமாகும். சிறுவர்களின் கிருமிக் கழிச்சலுக்கு மாதுளம் வேர்ப்பட்டைக் குடிநீர் தேன் கலந்து கொடுக்க நீங்கும் குடல் புழுக்கள் எல்லாவற்றுக்கும் மண்ணீரல் நோய், நாள்பட்ட சுரம் முறைச்சுரம் ஆகியவற்றுக்கும் இதே குடிநீரை கொடுக்கலாம்.

மாதுளம் இலை:- கண்நோய், கண்வலி, கண்சிவப்பு, வீக்கம், வேதனை இப்படியான கண் வியாதிகளில் மாதுளையின் தளிர்களை அவித்து நீரைவடிகட்டி இரண்டு மணிக்கு ஒருதரம் கண்களை கழுவிவர இந் நோய்கள் நீங்கும்.

செல்வி ஆ. சந்திரவதனி
சித்த மருந்தாளர்,
கற்பகனார் மருந்தகம்,
ஆணுக்காய் பாண்டியன்குளம்
ப. நெ. வ. அ. கூ. சங்கம்
வவுனிக்குளம்.

ஈழத்து மருத்துவர் வரலாறு

வன்னி மாவட்டம்
சாத்திரி கூழாங்குளம், வவுனியா
வைத்திய பூபதி ஆரியர்

1. வவுனியா மாவட்டத்திலே சித்த மருத்துவத்தைச் சிறப்பாக செய்து வரும் ஒருவைத்திய பரம்பரையினர். இவர்கள் கடந்த ஏழுதலைமுறைகளாக சித்த வைத்திய மரபினை காத்து வருகிறார்கள், இக்குடும்பத்தில் வனப்புலியர் ஆதியில் வைத்தியம் செய்தவராவர். பின்னர் மகன் கந்தர் மருத்துவம் செய்தார் இவர் மகன் வைத்திய பூபதி ஆரியர் வன்னி மன்னரால் சிறப்பிக்கப்பட்டவர். இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் கந்த புராணத்தை ஏடாக எழுதியவர். பொது வைத்தியராகவும், விசர்நாய்க்கடி, விஷகடி வைத்தியங்களும் செய்து வந்தவர்கள். இவர் மகன் வைத்தியர் வீரசிங்கம் ஆவார்.

2. வைத்தியாச்சாரி வீரசிங்கம் செல்லையா பிறந்த திகதி 12-4-1886 மறைந்த திகதி 12-5-1976. சாத்திரி கூழாங்குளம். இவருடைய குருமார் பேரன் வைத்தியர் ஆரியர் தந்தையார் வைத்தியர் வீரசிங்கம் பெரிய தந்தை மறைப்புலி, சிறிய தந்தை சண்முகம் ஆகியோராவர். ஓமந்தைப் பிரதேசத்தில் இலவச வைத்திய சேவை ஆற்றியவர். 1910—1975ம் ஆண்டு வரை 65 வருடகாலம் விஷகடி நிபுணராக விளங்கியவர். வைத்திய பரம்பரையில் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவர். அரச பதிவு இலக்கம் 3218. இவருடைய மாணாக்கர் தம் மக்கள் வீரசிங்கம், பத்மநாதன், நடராசா, பேரன் சத்தியநாதன்.

3. வைத்தியர் செல்லையா வீரசிங்கம், வைத்தியர் செல்லையா நடராசா இருவரும் அரச பதிவு பெற்ற வைத்தியர்களாவர், ஓமந்தை நடுச்செட்டிகுளம் பகுதியில் வைத்தியம் செய்தவர்கள்.

4. வைத்தியாச்சாரி வீ. செ. பத்மநாதன், சாத்திரி கூழாங்குளம், வவுனியா. 1927ல் பிறந்தவர். தந்தையார் வைத்தியாச்சாரி வீ. செல்லையா இவர் குரு. 1947 லிருந்து வைத்தியம் செய்து வருகிறார். அரச பதிவு இலக்கம் 7365. சகல

ரோகங்களுக்கும் சிகிச்சை செய்து வருகிறார். இவருடைய சீடர் மகன் சத்தியநாதன். இவர் இவ்வைத்திய குடும்பத்தில் ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவர்.

5. வைத்திய கலாநிதி பத்மநாதன், சத்தியநாதன் செல்லையா வைத்தியசாலை சாத்திரி கூழாங்குளம், பிறந்த திகதி 2-10-1961. இவருடைய குரு பேரன் வைத்தியாச்சாரி செல்லையா தந்தை வைத்தியாச்சாரி பத்மநாதன் ஆகியோர். யாழ்ப்பாணம் இலங்கா சித்தாயுர்வேதக் கல்லூரியில் படித்து டி.ஏ.எம் டிப்ளோமா பெற்றவர். 1983 லிருந்து ஓமந்தை பிரதேசத்தில் சகல ரோகங்களுக்கும் சிகிச்சை செய்து வருகிறார். அரச பதிவு இலக்கம் - 9567 இவர் இப்பரம்பரையில் ஏழாவது தலைமுறை வைத்தியராவர்.

6. வைத்திய கலாநிதி திருமதி கிருசாந்தி சத்தியநாதன் சாத்திரி கூழாங்குளம் வவுனியா. பிறந்த திகதி 31-1-1965. யாழ்ப்பாணம் சித்தாயுர்வேதக் கல்லூரியில் படித்து டி. ஏ. எம். டிப்ளோமா பெற்றவர். 1992 லிருந்து இறம்பைக்குளம் ஓமந்தைப் பிரதேசத்தில் வைத்தியம் செய்து வருகிறார்.

வைத்தியாச்சாரி அண்ணாமலை வீரகத்தி

7. கதிரவேலர் பூவரசங்குளம், ஓமந்தை பிறந்த திகதி 24-02-1918 குரு வைத்தியர் செல்லையா அரச பதிவு இலக்கம் 5019. பூவரசங்குளத்தில் 65 வருடங்கள் வைத்தியம் செய்தவர். சீடர்கள் பத்மநாதன், சிவானி சகல ரோகங்களுக்கும் இலவசமாக மருத்துவ சிகிச்சையளித்துவருகிறார்.

ஓமந்தை

8. வைத்திய கலாநிதி (செல்வி) சிவானி சிவசுப்பிரமணியம் கதிரவேலர் பூவரசங்குளம், ஓமந்தை. பிறந்த திகதி 10-9-1968. குரு வைத்தியர் அ. வீரகத்தி. யாழ். இலங்கா சித்தாயுர்வேதக் கல்லூரியில் ஐந்து (5) வருடங்கள் பயின்று டி. ஏ. எம். டிப்புளோமா பெற்றார். 1992 லிருந்து கிராமப்புற மக்களுக்கு சகல ரோகங்களுக்கும் இலவசமாக மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார். இறப்பைக்குளம், பூவரசங்குளம் ஆகிய இடங்களில் சேவை செய்து வருகிறார்.

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி

வைத்தியாச்சாரி கந்தர் பொன்னம்பலம்

சித்தன் குறிச்சி பூநகரி. பிறந்த திகதி 20-5-1919. இவருடைய குரு வைத்திய கலாநிதி வி. கனகசபை. 1940ல் வைத்திய சேவையை பூநகரி, மட்டுவில் நாட்டில் ஆரம்பித்தார். அரச பதிவு இலக்கம் - 1660. 1948ம் ஆண்டிலிருந்து பூநகரி, கிராம சபை உறுப்பினராகவும், உபதலைவராகவும் சேவையாற்றி இலவசமாக வைத்தியமும் செய்து வந்தார். பூநகரியில் சித்த வைத்தியத் துறையில் பெயர் பெற்று விளங்கியவர். உள்ளூராட்சி சேவை சித்த வைத்திய அதிகாரியாக பணிபுரிந்தார்.

1960—1963ம் ஆண்டுவரை பூநகரி கிராம சபை.

1964—1970ம் ஆண்டுவரை கராச்சி கிராம சபை.

1971—1974ம் ஆண்டுவரை அச்சுவேலி கிராம சபை.

1974—1976ம் ஆண்டுவரை பல்லவராயன்கட்டு கிராம சபை.

1977ம் ஆண்டிலிருந்து தனிப்பட்ட சேவை ஆற்றி வருகிறார் இவர் மகன் வைத்திய கலாநிதி சண்முகரத்தினம்.

யாழ். மாவட்டம்

பண்டத்தரிப்பு வைத்தியாச்சாரி கபிரியேற்பிள்ளை சூசைப்பிள்ளை

பிறந்த திகதி 8 - 5 - 1901. இவரின் குரு திருகோணமலை மூதூரை சேர்ந்த வைத்தியர் றோச் டி வாஸ் என்பவராவார். பண்டத்தரிப்பில் 1925ம் ஆண்டு தொடக்கம் 1972ம் ஆண்டு வரை வைத்தியம் செய்தவர். பதிவு செய்யப்பட்ட வைத்தியர். கெற்ப ரோகங்களில் நிபுணராக விளங்கியவர். இவருடைய மகள் அஞ்சலா இவரின் வைத்திய மாணவியாவார்.

வைத்தியாச்சாரி திருமதி அஞ்சலா செல்வத்துரை. பிறந்த திகதி 31-8-1934 இவர் தந்தையாரிடம் மருத்துவம் கற்றார். பின்னர் இந்தியாவில் பண்டிட் முத்துக்கருப்பபிள்ளை குருகுலத்தில் பயின்றவர். பதிவு செய்யப்பட்ட வைத்தியராவார். 1967ம் ஆண்டிலிருந்து வைத்தியம் செய்து வருகிறார். தோல் நோய்களில் சிறப்பான தேர்ச்சியுள்ளவர்.

வைத்திய கலாநிதி திருமதி கிளாஸ்டன் மாக்கிறெட். பண்டத்தரிப்பு. பிறந்த திகதி 27-6-1962, இலங்கா சித்தாயுர்வேதக் கல்லூரியில் பயின்றவர், இந்தியாவிலும் சித்த வைத்தியப் பயிற்சி பெற்றவர். 1989—1990 சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றியவர். தற்பொழுது தனியாக வைத்தியம் செய்து வருகிறார்.

கொடிகாமம்

வைத்திய கலாநிதி இராமுப்பிள்ளை கந்தையா

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம். பிறந்த திகதி 21-12-1935. யாழ்ப்பாணம் இலங்கா சித்தாயுர்வேதக் கல்லூரியில் படித்து டீ. ஏ, எம். டிப்ளோமா பெற்றவர். பதிவு இலக்கம் 3952 வைத்திய சேவை :-

1960—1964ம் ஆண்டு வரை தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்தார்,

உள்ளூராட்சிச் சேவையில் சித்த வைத்திய அதிகாரியாக 3-5-1965 லிருந்து கடமையாற்றி வருகிறார்.

1965 லிருந்து ஒட்டுசுட்டான்
உடுப்பிட்டி
அனலைதீவு
தற்பொழுது மிருசுவிலில் சேவையாற்றுகிறார்

வாதரோகம், சர்மநோய்களில் போதிய அனுபவம், உண்டு.

செல்வி சி. சிவகவிதா
சித்தா சுகாதார சேவையாளர்
ஒட்டுசுட்டான் ப, தெ. வ, அ. கூ. சங்கம்
ஒட்டுசுட்டான்

மருத்துவ மலர் கிடைக்கும் இடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

C. S. கைலாசபிள்ளை மருந்துக்கடை, யாழ்ப்பாணம்

இராசையா மருந்துக்கடை, யாழ்ப்பாணம்

கோபரம் மருந்து விற்பனை நிலையம், யாழ்ப்பாணம்

இராஜா மெடிக்கல்ஸ், சுன்னாகம்

கோபரம் மருந்துச்சாலை, சித்தங்கேணி

கோபரம் மருந்து விற்பனை நிலையம், கொடிகாமம்

கோபரம் மருந்து விற்பனை நிலையம், அச்சுவேலி

கோபரம் மருந்து விற்பனை நிலையம், நெல்லியடி

கோபரம் மருந்து விற்பனை நிலையம், பருத்தித்துறை

கற்பகனார் சித்த மருந்தகம், கொல்லவிளாங்குளம், வவுனிக்குளம்

முல்லை இணையம் சித்த வைத்திய நிலையம், புதுக்குடியிருப்பு

வைத்திய கலாநிதி வ. சிவபாலன், திருகோணமலை

வைத்திய கலாநிதி (செல்வி) சி. சிவானி பூவரசங்குளம், ஓமந்தை

கோபரம் மருந்து விற்பனை நிலையம், பூநகரி, கிராஞ்சி

கிளிநொச்சி ப. நெ. கூட்டுறவுச் சங்கம, கிளிநொச்சி

சிவத்திரு த. உமாபதிசிவக் குருக்கள், மட்டக்களப்பு

மருத்துவ மலர் வளர்ந்து
மணம் பரப்ப வாழ்த்துகிறோம்

சகலவிதமான சித்த மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
விற்பனையாளர்கள்.

இராசையா மருந்துக்கடை

பெரியகடை, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம்

அச்சுப்பதிவு : ஞானம் அச்சகம் (தெல்லிப்பழை) கொக்குவில்